**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**முன்னிலை – திரு.எஸ்.உத்தமராஜ், பி.ஏ., பி.எல்.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**இராமநாதபுரம்**

**2024ம் ஆண்டு ஜுன் திங்கள் 21–ம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A.No.33/2024**
**in**
**O.S.No.81/2022**

கே. குருமூர்த்தி – மனுதாரர்/1–ம் பிரதிவாதி

/எதிர்/

ஜி. சுப்புலெட்சுமி – எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது என் முன்பாக 19.06.2024ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபொழுது மனுதாரருக்காக வழக்குரைஞர் திரு.J.உதுமான், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் திரு.K. நாகராஜன், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு விவாதம் கேட்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

O.S.No.81/2022 வழக்கில் கடந்த 04.10.2023 அன்று ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவு செய்ய வேண்டி உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் Order 9 Rule 7–ன் படி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

அசல் வழக்கில் கடந்த 04.10.2023 அன்று மனுதாரர்/1–ம் பிரதிவாதி

S UTHAMARAJ
Digitally signed by S UTHAMARAJ
Date: 2024.06.21 19:46:13 +0530

தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரருக்கு உடல்நிலை குறைவின் காரணமாக மனுதாரரால் அவர் தரப்பு வழக்குரைஞரை சந்தித்து அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. பின்னர் மனுதாரர் கடந்த 01.06.2024 அன்று எதேச்சையாக அவரது வழக்கறிஞரை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோதுதான் மனுதாரருக்கு எதிராக கடந்த 04.10.2023 அன்று ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்ட விபரம் மனுதாரருக்கு தெரிய வந்தது. மனுதாரர் கடந்த 04.10.2023 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போனது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக கடந்த 04.10.2023 அன்று ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டியது அவசியமாக இருக்கிறது. இல்லாது போனால் மனுதாரருக்கு பாதகம் ஏற்படக்கூடியதாக இருக்கிறது என்று கூறி மனுதாரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்</u>:–

மனுதாரர்/1–ம் பிரதிவாதி வழக்கினை முடிக்கவிடாமல் வேண்டுமென்றே காலம் தாழ்த்தும் நோக்கத்தில் பொய்யான விபரங்களை கூறி மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் கடந்த 27.10.2022 அன்று 1–ம் பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அவகாசம் கோரியதை தொடர்ந்து சி.பி.சி. ஆர்டர் 8 ரூல் 1–ல் கண்ட விதிமுறையின்படி மேற்கண்ட தேதியிலிருந்து 30 நாட்கள் அவகாசம் கொடுத்து 12.12.2022–ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டிருந்தது. ஆனால் அன்றைய தினம் 1–ம் பிரதிவாதி சார்பில், அவகாசம் கோரியதை தொடர்ந்து 11.01.2023, 25.01.2023, 28.01.2023, 28.02.2023, 10.03.2023, 20.03.2023, 29.03.2023, 10.04.2023, 17.04.2023, 01.06.2023,

S UTHAMARAJ Digitally signed by S UTHAMARAJ Date: 2024.06.21 19:46:43 +0530

08.06.2023, 03.07.2023, 17.07.2023, 21.07.2023, ஆகிய காலங்களில், 1–ம் பிரதிவாதிக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அவகாசம் கொடுக்கப்பட்டது. சி.பி.சி ஆர்டர் 8 ரூல் 1–ல் கண்ட விதிமுறையின்படி 27.10.2022–ம் தேதியிலிருந்து அதிகபட்சம் 90 நாட்களுக்குள் 1–ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்திருக்க வேண்டும் அதன்படியான காலஅவகாசம் 25.01.2023–ம் தேதியுடன் முடிவடைந்துவிட்டது.

ஆனால் 25.01.2023–ம் தேதிக்கு பின்னரும், 1–ம் பிரதிவாதி வேண்டுமென்றே எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல், 21.07.2023–ம் தேதி அவகாசம் கோரியபோது 28.07.2023–ம் தேதி Written Statement NFA என உத்தரவு ஏற்பட்டது. அதன்பின்னரும், 1–ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் அவகாசம் கோரியதை தொடர்ந்து 07.08.2023, 16.08.2023, 20.09.2023, 04.10.2023 ஆகிய தேதிகளில் W.S NEA, என அவகாசங்கள் வழங்கப்பட்ட போதும் 1–ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் 04.10.2023–ம் தேதி 1–ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டது. பின்னர் EX party Evidence–க்காக 20.10.2023, 15.11.2023, 24.11.2023, 04.12.2023, 24.01.2024, 01.02.2024, 16.02.2024, 15.03.2024, 05.04.2024, 15.04.2024, 23.04.2024, 26.04.2024 ஆகிய தேதிகளில் வாய்தா ஏற்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து வாதி 26.04.2024–ம் தேதி PW1 ஆக சாட்சியம் அளித்து ஆவணங்களை தாக்கல் செய்ததை தொடர்ந்து வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக, 03.06.2024–ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டிருந்தபோது வாதி தரப்பு கூடுதல் சாட்சியம் இல்லை என வாதி சார்பில் தெரிவிக்கப்பட்டதால் விவாதத்திற்காக 04.06.2024–ம் தேதி வாய்தா ஏற்பட்டு அன்றைய தினம் மனுதார்/1–ம் பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

S UTHAMARAJ Digitally signed by S UTHAMARAJ Date: 2024.06.21 19:46:56 +0530

மேற்கண்ட வாய்தா தேதிகளில், பெரும்பாலான நாட்கள் 1–ம் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வந்து அசல் வழக்கில் வாய்தா தேதியை தெரிந்து கொண்டு சென்றார். ஆனால் அதற்குமாறாக உண்மை விவரங்களை மறைத்து பொய்யான விவரங்களின் அடிப்படையில் இம்மனு தாக்கல் செய்துள்ளதால், மனுதாரருக்கு அவரது மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதில்லை. அவ்வாறாக 1–ம் பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்டுள்ள எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்ய மனுவில் சரியான மற்றும் போதுமான காரணங்கள் சொல்லப்படாததால், மனுதாருக்கு அவரது மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதில்லை. தாவா 1–வது இலக்க சொத்தை பொறுத்து 1–ம் பிரதிவாதி வாதிக்கு ஆரம்காலம் முதல் குத்தகை செலுத்தாமலும், தாவா 2 வது இலக்க சொத்தை பொறுத்து Use and Occupation–க்கான நஷ்டியை 2019–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் செலுத்தாமலும் இருந்து வழக்கினை முடிக்கவிடாமல் வேண்டுமென்றே காலதாமதபடுத்தி வருகிறார். அதன் அடிப்படையிலேயே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே மனு எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**4.** இம்மனுவில் இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரின் இம்மனுவானது அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா? என்பதே ஆகும்.

**5. <u>பிரச்சனை</u> :**

இரு தரப்பும் கேட்கப்பட்து. அசல் வழக்கில் 04.10.2023 ம் தேதி 1–ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதாரர்/1–ம் பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**6.** மனுதாரர்/1–ம் பிரதிவாதி தனது மனுவில், கடந்த 04.10.2023 அன்று அசல் வழக்கில் மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை

S UTHAMARAJ
Digitally signed by S UTHAMARAJ
Date: 2024.06.21 19:47:11 +0530

தாக்கல் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்த சமயம் மனுதாரருக்கு உடல்நிலை குறைவின் காரணமாக மனுதாரரால் அவர் தரப்பு வழக்குரைஞரை சந்தித்து அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்றும், பின்னர் மனுதாரர் கடந்த 01.06.2024 அன்று எதேச்சையாக அவரது வழக்கறிஞரை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோதுதான் மனுதாரருக்கு எதிராக கடந்த 04.10.2023 அன்று ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்ட விபரம் மனுதாரருக்கு தெரிய வந்தது என்றும், மனுதாரர் கடந்த 04.10.2023 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போனது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும் கூறியுள்ளார். எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் பொய்யானவை என்றும் மனுதாரர் பல வாய்தா தேதிகளில் பெரும்பாலான நாட்கள் 1–ம் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வந்து அசல் வழக்கில் வாய்தா தேதியை தெரிந்து கொண்டு சென்றார் என்றும், 1–ம் பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனுதாரரின் மனுவில் சரியான மற்றும் போதுமான காரணங்கள் சொல்லப்படாததால் மனுதாரருக்கு அவரது மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதில்லை என்றும் எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்துள்ளார்.

**7.** எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கை இராமநாதபுரம் மாவட்டம் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் 26.09.2022 அன்று தாவா 1–வது இலக்க சொத்தை பொறுத்து செயல்உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா 2–வது இலக்க சொத்தை பொறுத்து சுவாதீனப்பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளார். அன்றே இவ்வழக்கு மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்பு இந்நீதிமன்றத்திற்கு

S UTHAMARAJ
Digitally signed by S UTHAMARAJ
Date: 2024.06.21 19:47:26 +0530

அனுப்பப்பட்டுள்ளது. அதன்பின்பு இம்மனுதாரரான 1–ஆம் பிரதிவாதி தரப்பில் 27.10.2022 அன்று வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னர் 1–ஆம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதிய அவகாசம் கொடுத்தும் அவர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் 04.10.2023 அன்று 1–ம் பிரதிவாதி ஒருலைபட்சமாக்கப்பட்டுள்ளார். பின்னர் 26.04.2024 அன்று வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை முடிக்கப்பட்டு பின்னர் வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக 03.06.2024 அன்று வாய்தா ஏற்பட்டிருந்த சமயம் வாதி தரப்பில் சாட்சியம் இல்லை என தெரிவிக்கப்பட்டதன் பேரில் விவாதத்திற்கு 04.06.2024 அன்று வாய்தா ஏற்பட்டிருந்த சமயம் இம்மனுவை மனுதாரரர் தாக்கல் செய்துள்ளார். மேலும் இம்மனுவுடன் சேர்ந்து அசல் வழக்கிற்கு எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது.

**8.** மனு, எதிருரை மற்றும் இருதரப்பு வாதம் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுதாரரான 1–ஆம் பிரதிவாதி 27.10.2022 அன்று தனது வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்தும், சுமார் ஒரு வருட காலத்திற்கு பலமுறை வாய்ப்புகள் அளிக்கப்பட்டும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் 04.10.2023 அன்று அசல் வழக்கில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்; அதன்பிறகும் சுமார் 7 மாதம் கழித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்; வழக்கை தாமதப்படுத்தவும், இழுத்தடிக்கவும் மனுதாரர் இவ்வாறு செய்து வருகிறார்; எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என எதிர்மனுதாரரான வாதி தரப்பில் வாதிடப்பட்டது. மனுதாரர் ஆஜராகாததால் மனுதாரருக்கு அவருடைய வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டது; ஆனால் மனுதாரர் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததால் அவரால் அவருடைய வழக்குறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல்

S UTHAMARAJ
Digitally signed by S UTHAMARAJ
Date: 2024.06.21 19:47:53 +0530

செய்யமுடியாமல் போய்விட்டது; தற்போது இம்மனுவுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது; எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் அசல் வழக்கை எதிர்கொள்ள மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. மேலும் மனுதாரரின் வழக்கறிஞர் மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பின் நகலும் மனுதாரர் தரப்பில் வாதத்தின்போது தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரருக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டிருந்ததாக மனுவில் கூறப்பட்டிருக்கவில்லை என்றும், தற்போதுதான் அவ்வாறு கூறப்படுகிறது என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் பதில்வாதம் செய்யப்பட்டது.

**9.** மனுதாரர் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தாரா, என்ன சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்பதற்கு எந்த ஆதாரமும் மனுதாரர் தரப்பில் முன்னிடப்படவில்லை. மனுதாரர் சுமார் 17 மாதங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துள்ளார். எனினும் இம்மனுவுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டச் சூழ்நிலையில், அசல் வழக்கை எதிர்கொள்ள மனுதாரருக்கு ஒரு வாய்பளிக்கும் வகையில், மனுதாரரின் காலதாமதத்தை கருத்தில் கொண்டு, இம்மனுவை உரிய செலவுத்தொகையுடன் அனுமதிக்க உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்தது என்றும் வழக்கை தகுதியின் அடிப்படையில் முடிவு செய்ய வாய்ப்பு ஏற்படும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.** முடிவில், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு இம்மனுவின் செலவுத் தொகையாக ரூ.2,000/-ஐ, 05.07.2024 அன்றோ அதற்கு முன்னரோ செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என நிபந்தனை விதித்து உத்தரவிடப்படுகிறது. 05.07.2024 அன்று அழைக்கவும்.

S UTHAMARAJ

Digitally signed by S UTHAMARAJ
Date: 2024.06.21 19:48:14 +0530

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு என்னால் நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2024–ம் ஆண்டு ஜூன் திங்கள் 21–ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

S UTHAMARAJ

Digitally signed by S UTHAMARAJ
Date: 2024.06.21 19:48:27 +0530

**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:–** இல்லை.

S UTHAMARAJ

Digitally signed by S UTHAMARAJ
Date: 2024.06.21 19:48:40 +0530

**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**